# திராவிடப் போராளிகள்

29 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# கோலார் வயல் கொள்கைச் சுடரொளி!

அன்னபூரணி அம்மையாரின் சிந்தனை, தத்துவப் பின்னணி உடையது. வரலாறு, அறிவியல் மட்டுமல்ல வேத, புராண, உபநிடதங்களையும் அவர் கற்றுத்தேர்ந்தவர் என்பதை, 10.7.1932 ஆம் தேதி **'குடிஅரசு'** இதழில் எழுதிய கட்டுரை விளக்குகிறது.

'இந்த ஆபாசம் எந்த நாட்டில் உள்ளது?' என்ற தலைப்பில் "வேத புராணங்களா வெகு க்ஷவரக் குப்பைகளா? பதிலிருக்கும் பண்டிதர் வெளிவருக!" என்ற சவாலுடன் வேதங்களையும் புராணங்களையும் தோலுரித்துக் காட்டி, பண்டிதர் உலகைக் கலகலக்கச் செய்துவிட்டார் அன்னபூரணி அம்மையார்.

2,500 வருடங்களுக்கு முன் பிறந்த புத்தரைப் பற்றி 5,000 வருடங்களுக்கு முன்பு வியாசரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் பதினெண் புராணங்களில் ஒன்றான சிவபுராணம் பேசுவதையும், இன்னும் இத்தகைய பல புரட்டுகளையும் உடைத்தெறிகிறது அன்னபூரணி அம்மையாரின் எழுத்து.



## எழுத்தும் - பேச்சும்

1932-ஆம் ஆண்டு மே மாதம், சேலத்தில் கூடிய சேலம் ஜில்லா சுயமரியாதைப் பெண்கள் மாநாட்டைத் திறந்து வைத்து, அவர் ஆற்றிய உரையானது 'பெண் விடுதலை என்பது சமூக மாற்றத்தின் ஒரு பகுதியே' என்ற தெளிவை வழங்குகிறது.

இந்து மதப் புராணங்கள், கிரேக்க, ரோமானிய வரலாறுகள், அமெரிக்கப் பெண்களின் அறிவியல் சாதனைகள், உலகப்போர் காலத்தில் பெண்களின் பங்களிப்பு, ஜெர்மனி, பிரான்ஸ் நாட்டுப் பெண்கள் நிலை, துருக்கியின் சமூகச் சீர்திருத்தம், இந்தியாவின் 1911-ஆம் ஆண்டு மக்கள்தொகை அறிக்கை என அவரது ஆழ்ந்த கல்வியறிவு எந்தத் துறையையும் விட்டு வைக்கவில்லை என்பதற்கு, இவ்வுரையே சான்றாகும். மக்கள்தொகை (CENSUS) கணக்கெடுப்பை **'ஜனக்கணித அறிக்கை'** என்று குறிப்பிடுகிறார் அன்னபூரணி அம்மையார்.

மேலும் 1934-ஆம் ஆண்டு மார்ச் 11 அன்று சிவகங்கையில் நடைபெற்ற ராமநாதபுரம் மாவட்ட சுயமரியாதை மாநாட்டினைத் திறந்து வைத்து, சிறப்புமிக்க ஓர் ஆய்வுரையை வழங்கினார். தொடர்ந்து, அதே ஆண்டு மே மாதம் 20-ஆம் தேதி திருச்செங்கோடு தாலுகா ஆதி திராவிட மாநாட்டின் தொடக்க உரையில், 'தாழ்த்தப்பட்ட தனிப்பெருங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக' உரையாற்றினார்.

## அழகிய மணமேடை

அன்னபூரணி அம்மையாருக்கு இளம் வயதில் திருமணம் நடைபெற்று அவரது கணவர் மரணமடைந்துவிட்டார். அவரது அறிவாற்றலையும், சீர்திருத்தச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் வாய்ப்பினை அவருக்குச் சுயமரியாதை இயக்கம் அமைத்துக் கொடுத்தது. அத்தகைய செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த சுயமரியாதை வீரரான ரத்தினசபாபதி அவர்களை அவர் விரும்பியது இயல்பானதே. முற்போக்குச் சிந்தனை கொண்ட அப்பாத்துரையாரும் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு, அவர்கள் மணவிழாவை கோலார் தங்க வயலில் 1932-ஆம் ஆண்டு, அக்டோபர் ஒன்றாம் தேதி, மாலை 6 மணிக்கு உயர்திரு.தருமதீர பிக்கு அவர்கள் தலைமையில் சுயமரியாதை முறைப்படி நடத்தினார்.

அன்னபூரணி- ரத்தின சபாபதி ஆகியோரின் திருமணம் பற்றிய இரண்டு செய்திக் குறிப்புகள், 1932-ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ஆம் தேதியிட்ட **'குடிஅரசு'** இதழில் வெளியிடப்பட்டிருந்தன. ஒன்று திருமண நிகழ்வுச் செய்தி. மற்றொன்று அத்திருமணத்தைப் பற்றி, தந்தை பெரியார் எழுதிய பாராட்டுரை.

செய்திக் குறிப்பில், மணப்பெண்ணை 'மணாளி' என்றும் மணமகனை 'மணாளன்' என்றும் இருவரையும் குறிப்பதற்கு 'மணாளர்' என்றும் அழகிய தமிழ்ச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அந்தத் திருமணத்தைப் பற்றிப் பெரியாரின் அறிக்கை மிக முக்கியமானது.

**'கோலார் தமிழன்'** ஆசிரியரும் நமது நண்பருமான அப்பாத்துரையார் அவர்கள் குமாரத்தி திருமதி.அன்னபூரணிக்கும், நெல்லை, ஆசிரியர் திரு. ரத்தினசபாபதி அவர்களுக்கும் சென்ற ஞாயிறன்று கோலாரில் கலப்புச் சீர்திருத்தத் திருமணம் நடந்தது. சீர்திருத்த நெறிபற்றி, சுயமரியாதை இயக்க ஆதரவில் நடைபெற்ற, பெறும், பல கலப்பு, காதல் மணங்களிலெல்லாம் இது ஒரு தனி மாண்பு கொண்டதை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

அதாவது மணமகள் பௌத்த சமய, தாழ்த்தப் பட்டோர் என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்தவர். மணமகன் சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர். ஜாதித் திமிரும், சமய ஆணவமும், உயர்வு தாழ்வுக் கொடுமையாகிய சமூகப் புல்லுருவிகள் நம்மைப் பீடித்து, பண்டைய மூடப்பழக்க வழக்கங்களால் அடிமையாகித் தவித்து அல்லலுறும் சமுதாய வாழ்க்கை, அறிவற்று, ஆண்மையற்று, ஒளியிழந்து தேய்ந்து போகாது தடுக்க, இத்தகைய கலப்பு மணங்கள் பேருதவியாயிருக்குமென்றே எண்ணுகிறோம். அத்தகைய கொடிய சமூக விலங்கை உடைத்தெறிந்து, வெளிப்போந்த மணமக்களைப் பெரிதும் போற்றுகிறோம்.

திரு.ரத்தினசபாபதி அவர்களைச் சுய மரியாதை உலகம் நன்கறியும். திருமதி அன்னபூரணி போதிய கல்வி அறிவும் சீர்திருத்த அவாவும் கொண்டவர். ஏற்கனவே மணம் செய்து துணைவனை இழந்தவர்.

இன்னார் இருவரது மணமும் சுயமரியாதை அன்பர்களுக்குச் சிறந்த படிப்பினை யாவதோடு இத்தகைய மணங்கள் நாட்டில் ஏராளமாக நடைபெற வேண்டுமென விரும்புகிறோம். திரு. ரத்தின சபாபதி அவர்களின் சீர்திருத்த அவாவையும் வீரத்தையும் மெச்சுவதோடு மணமக்கள் சுயமரியாதைக் கொள்கைகளை எங்கும் பரப்பி மக்களை அறிவுள்ளோராக்கத் தொண்டாற்றி வருவார்களென்றே நம்புகிறோம்" என்று மனம் நெகிழ்ந்து பாராட்டினார்.

ஓவியம் : ரவி பேலட்




**செய்திக் குறிப்பில், மணப்பெண்ணை 'மணாளி' என்றும் மணமகனை 'மணாளன்' என்றும் இருவரையும் குறிப்பதற்கு 'மணாளர்' என்றும் அழகிய தமிழ்ச்சொற்கள் கையாளப்பட்டுள்ளன.**

## கோலார் நாடகம்

இப்படி, தந்தை பெரியாரால் பாராட்டப்பெற்ற, ரத்தின சபாபதி அவர்கள் ஈரோட்டில் ஆசிரியராகப் பணியாற்றியவர். கலை இலக்கிய ஆர்வமும் எழுத்தாற்றலும் கொண்டவர். திராவிட இயக்க இதழ்களின் வரிசையில் இடம்பெற்ற **'பிரசண்ட மாருதம்'** என்ற இதழின் ஆசிரியர். அதனை நடத்தியவர். அவரும் அன்னபூரணி அம்மையாரும் ஒருமித்த சிந்தனை உடையவர்கள். அவர்களின் ஒன்றுபட்ட எண்ணம் அவர்கள் செயலிலும் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்பட்டது. இருவரும் இணைந்து சுயமரியாதை மாநாடுகளிலும், ஆதி திராவிடர் சங்கச் செயல்பாடுகளிலும் பங்கேற்றனர். அதனிலும் மேலான செய்தி ஒன்றுண்டு. ரத்தினசபாபதி அவர்கள் தன் மாமனாரான அப்பாத்துரையாருடன் சேர்ந்து நாடகம் எழுதி நடித்துள்ளார். அவர் இயக்கிய **'காதல்மணம்'** என்ற நாடகம் பெங்களூரிலும், கோலார் தங்க வயல் தமிழர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இத்தகைய புரட்சிகரமான சிந்தனையும் செயலும் கொண்ட அன்னபூரணி - ரத்தினசபாபதி இருவரும் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பும் பணியில் இறுதிவரை இணைந்து செயல்பட்டார்கள். அன்னபூரணி அம்மையாரைப் போன்ற போராளிகளின் வாழ்க்கையே இன்றும் நமக்கு நம்பிக்கையை விதைத்துக் கொண்டிருக்கிறது.

(வருவார்கள்...)

## பள்ளிக்கு உதவுவது சமூகப் பெருமை!



முன்னாள் மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளியை மேம்படுத்தும் 'நம்ம ஸ்கூல் பவுண்டேஷன்' திட்டத்தினை அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. ஆனால், பள்ளிகளுக்கு உதவி செய்ய முன்னாள் மாணவராக இருக்க வேண்டிய அவசியமில்லை, வசதியுள்ள எல்லோரும் உதவலாம் என முன் வந்துள்ளார் மதுரை, தத்தனேரியைச் சேர்ந்த வியாபாரி ராஜேந்திரன். தற்போது 86 வயதாகும் அவர், மதுரை மாநகராட்சிப் பள்ளிகளுக்குச் சத்தமில்லாமல், செய்த உதவிகள் தற்போது கவனத்துக்கு வந்துள்ளன. மாநகராட்சி திரு.வி.க. மேல்நிலைப் பள்ளிக்கு 2018-ஆம் ஆண்டு புதிய வகுப்பறைக் கட்டடம், இருசக்கர வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றைக் கட்டிக் கொடுத்துள்ளார். இந்த ஆண்டு, கைலாசபுரம் தொடக்கப்பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடம், கழிவறைகள் ஆகியவற்றைக் கட்டிக் கொடுத்துள்ளார். சுமார் ரூ.1.80 கோடிக்கு அவர் செய்த உதவிகளை அறிந்து மதுரை மாநகராட்சி ஆணையர் பாராட்டுத் தெரிவித்த பின்னரே, மக்களின் கவனத்துக்கு வந்துள்ளது. அவரை உலகுக்கே அடையாளம் காட்டும்விதமாக, பேராசிரியர் சாலமன் பாப்பையா நேரில் சென்று பாராட்டுத் தெரிவித்துள்ளார். மாணவர்களுக்குப் பயன்தரத்தக்கவற்றை யார் செய்தாலும், அது தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் கொண்ட அக்கறையாகும். பள்ளிக்குச் செய்யும் உதவிகள் சமூகப் பெருமையாகும்.

## :ப்ளாஷ்பேக்



### கலங்கிய கலைஞர்!



சோமசுந்தரம்

1969-ஆம் ஆண்டு, கோயம்புத்தூரில் இருக்கும் அமராவதி நகர் சைனிக் பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா மறைந்து சில மாதங்களே ஆன நிலையில், அண்ணாவின் வாழ்க்கையை விளக்கும் புகைப்படக் கண்காட்சி 'அண்ணா அரங்கம்' என்ற பெயரில் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் கலைஞரும், அமைச்சர் சாதிக் பாட்சாவும் அந்நிகழ்வுக்கு வருகை தந்து கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அண்ணா மறைவின்போது கலைஞர் வாசித்த இரங்கல் கவிதையின் ஒலிநாடாவை ஒளிபரப்பிய போது, சில வினாடிகள் கண் கலங்கி நின்றுவிட்டார், தலைவர் கலைஞர். அப்பள்ளியில் ஆசிரியராக இருந்த எனக்கு இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டதை, என்னுடைய 91-ஆம் வயதில் நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது.

**-மு.வி.சோமசுந்தரம்,**
**கோவைப்புதூர்,**
**கோயம்புத்தூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473

## கருவூலம்

### பிரதமரை உருவாக்கிய கலைஞர்

**1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு, புதுவையில் 38 இடங்களில் கழகக் கூட்டணி வெற்றி பெற்றது. அப்போது ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வுக்கு ஏற்பட்ட பலத்த தோல்வி காரணமாகப் பல சலுகைகள் அறிவிக்கப்பட்டன. மதுவிலக்குச் சட்டங்களில் தளர்வுகளைக் கொண்டு வந்தனர். தனியார் வீடுகளில், ஓட்டல் அறைகளில் மது அருந்தினால் காவல்துறை நடவடிக்கை எடுக்காது என்கிற அறிவிப்பினை வெளியிட்டார்கள். டெல்லியில் நாடாளுமன்றக் கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியில் மேடையில் அமர வைத்து கலைஞருக்கு மரியாதை செய்தார் இந்திராகாந்தி அம்மையார். இந்த வெற்றிக்கு அடிப்படைக் காரணம் கலைஞர் எனப் புகழ்ந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 204




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131